# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 176/ந/2017**

**நாள் : 20/11/2018**

**திரு எஸ்.எம். யூனூஸ்,
பேர்ணாம்பட்டு – 635 810.** – **முறையீட்டு மனுதாரர்**

**(1) நகராட்சி ஆணையர்,
(2) நகராட்சிப் பொறியாளர்,
(3) முன்னாள் நகர்மன்றத் தலைவர் (ம)
(4) துணைத்தலைவர்,
பேர்ணாம்பட்டு நகராட்சி,
பேர்ணாம்பட்டு.** – **எதிர் மனுதாரர்கள்**

வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு, மதரஸா ஏ இஸ்லாமியா தெரு, எண்.53/24 என்ற முகவரியில் வசிக்கும் திரு S.M. யூனுஸ் அவர்களின் 01.09.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 05.09.2017 அன்று பெறப்பட்டு, 176/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரர் தாக்கல் செய்த ஆவணங்கள் மற்றும் விசாரணையின்போது அவர் அளித்த வாக்குமூலம், நகராட்சி ஆணையர், முன்னாள் நகர்மன்றத் தலைவர் மற்றும் நகர்மன்றத் துணைத் தலைவர் ஆகியோரின் வாக்குமூலங்கள் மற்றும் நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்கள் சமர்ப்பித்த அறிக்கை ஆகியவை பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு, மதரஸா ஏ இஸ்லாமியா தெரு, எண்.53/24 என்ற முகவரியில் வசிக்கும் திரு S.M. யூனுஸ் என்பவர், பேர்ணாம்பட்டு நகராட்சி சம்பந்தப்பட்ட கீழ்க்காணும் முறைகேடுகளை தெரிவித்து, 1988–ஆம் ஆண்டு ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

(1) GI மெட்டலில் செய்யப்பட்ட தெரு விளக்கு மின் கம்பங்கள் மற்றும் உயர் கோபுர மின் விளக்கு கம்பங்களின் விலைப்பட்டியலை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் வழங்க மறுப்பது ;

(2) 12/5 மற்றும் 16 MTR உயர் கோபுர மின் கம்பங்கள், விளக்குகள், சுவிட்ச் மற்றும் பொருத்துக் கட்டணம் உட்பட உண்மையான விலைகள் முறையே ரூ. 1.07 லட்சம் மற்றும் ரூ. 1.27 லட்சம் என்றும்;

(3) நகராட்சியின் வார்டு எண். 5–இல் 2011–ஆம் ஆண்டு முதல் 2017–ஆம் ஆண்டு முடிய எந்தப் பணியும் செய்யாமல் நகராட்சிக்கு ரூ.12 லட்சம் இழப்பு ஏற்படுத்தியது ;

(4) (a) 2011–2012–ஆம் ஆண்டுகளில் நகராட்சியின் 21 வார்டுகளில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ரூபாய் 7.14 லட்சம் செலவில் சோடியம் விளக்குகள் பொருத்தியது மற்றும் ரூபாய் 5.88 லட்சம் மதிப்பில் CFL பல்பு பிட்டிங் வாங்கியதில் ஊழல் ;

(b) 2012–2013–ஆம் ஆண்டுகளில் சாலைப்பணிகள் எதுவும் மேற்கொள்ளாமல் ரூபாய் 70 லட்சம் கணக்கு காட்டி முறைகேடு செய்தது ;

(c) 2012–2013–ஆம் ஆண்டில் இல்லாத பூங்காவிற்கு ரூபாய் 30 லட்சம் செலவு காட்டியது ;

(d)2013–2014–ஆம் ஆண்டில் குடிநீர் பணிகள் செய்யாமல் ரூபாய் 1.76 கோடி முறைகேடு செய்தது ;

(e) 2011–2013–ஆம் ஆண்டுகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டப் பணிகள் ரூபாய் 9 லட்சம் ;

(f) 2013–2014–ஆம் ஆண்டில் சாலை மற்றும் சிமெண்ட் சாலை திட்டப்பணிகள் மதிப்பு ரூபாய் 44.90 லட்சம் ;

(g) 2013–2014–ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் நிதி மூலம் தேன்மலை குடிநீர் திட்டப்பணியில் ரூபாய் 42 லட்சம் முறைகேடு ;

(h) 2013–2014–ஆம் ஆண்டில் டிராக்டர் மூலம் குடிநீர் வழங்கியதில் ரூ.8.50 லட்சம் முறைகேடு ;

(5) வார்டு எண்.5–இல், தோப்பு வீதியில் பைப்லைன் செலவினத்திற்கென போலியான பட்டியல் மூலம் ரூபாய் 12 லட்சம் மோசடி செய்தது ;

(6) ஆமீனா வீதி மழைநீர் வடிகால்வாய் மற்றும் கல்வெட்டு அமைத்தல், சார்மினார் வீதியில் ஆழ்துளை கிணறு அமைத்து, பைப்லைன் விஸ்தரிப்பு, மரீத் கிணறு தூர்வாருதல், தோப்பு வீதி பைப் லைன் ஆகிய பணிகளில் ரூபாய் 4 லட்சம் முறைகேடு ;

(7) 84 எண்ணிக்கையிலான CFL fitting வாங்கியதில் ரூபாய் 5.50 லட்சம் முறைகேடு.

2. முறையீட்டு மனுதாரரிடம் 08.11.2017 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. தனது வார்டு எண்.5–இல் பணிகள் மேற்கொள்ளப்படாமலேயே ரூபாய் 12 லட்சம் மோசடி செய்யப்பட்டுள்ளது என்றும்,2008–2009–ஆம் ஆண்டில் மூன்று உயர் மின் கோபுர விளக்குகள் தலா ரூபாய் 10 லட்சம் மதிப்பீட்டில் அமைத்ததாக கணக்கு காட்டியுள்ளனர் என்றும் ஆனால் ரூபாய் 1.50 லட்சம் சந்தை மதிப்பில் தற்பொழுது கிடைக்கிறது என்று தெரிவித்தார். 162 CFL fitting அமைக்கப்பட்டதில் ரூபாய் 10.66 லட்சம் நகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்பட்டுள்ளதென்றும், 2012–2013–ஆம் ஆண்டுகளில் சாலைப்பணிகள் மற்றும் குடிநீர் பணிகள் மேற்கொள்ளப் படாமலேயே முறையே ரூபாய் ஒரு கோடி 76 லட்சம் மற்றும் ரூபாய் 70 லட்சம் கையாடல் செய்யப்பட்டுள்ளன என்றும் விசாரணையின் போது தெரிவித்தார். பூங்கா இல்லாமலேயே பூங்காவிற்காக ரூபாய் 90 லட்சம் செலவு செய்து முறைகேடு செய்யப்பட்டுள்ளதென்றும், ஆனால் மனுவில் ரூ. 30 லட்சம் என்று தவறாக குறிப்பிட்டுள்ளதையும் குறிப்பிட்டார். திடக்கழிவு மேலாண்மைக்காக சட்டத்திற்குப் புறம்பாக ரூபாய் 90 லட்சம் எடுக்கப்பட்டுள்ளதென்றும்

விசாரணையின் போது தெரிவித்தார். சாலைப்பணிகள் செய்யாமல் ரூ. 1.76 லட்சம் கையாடல் செய்யப்பட்டுள்ளதென்றும் ஆனால், தனது மனுவில் தவறுதலாக ரூ. 70 லட்சம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். தேன்மலைக் கூட்டு குடிநீர் திட்டத்தில் ரூபாய் 42 லட்சம் கையாடல், ரூபாய் 10 லட்சத்திற்கு மேல் செலவு ஆகாத டிராக்டர் மூலம் குடிநீர் வழங்கியதற்கு 1.40 கோடி எனக் கணக்குக் காட்டியதுடன் நகர்மன்ற உறுப்பினர்கள் தங்களுடைய டிராக்டர் மூலம் குடிநீர் பணிகளை மேற்கொண்டனர் எனத் தெரிவித்தார். மழை நீர் வடிகால் வசதி எதுவும் இல்லாத நிலையில் ரூபாய் 80 லட்சம் எனக் கணக்குக் காட்டியுள்ளதையும் விசாரணையின்போது தெரிவித்தார். தனது சார்பாக சாட்சிகள் யாரையும் விசாரிக்க வேண்டியதில்லை எனத் தெரிவித்ததுடன் தவறு செய்பவர்கள் மீது நடவடிக்கை மேற்கொண்டு பணத்தை மீட்டு அரசுத் தலைப்புக் கணக்கில் செலுத்தவும் கேட்டுக்கொண்டார்.

3. முன்னாள் நகர்மன்றத் துணைத் தலைவரான திரு ஆலியார் ஜுபேர் அஹமத் தனது 21.02.2018 நாளிட்ட கடித்தில் பேர்ணாம்பட்டு நகராட்சியில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு பின்பற்றப்படும் நடைமுறைகளைக் குறிப்பிட்டுள்ளதுடன் ஒப்பந்தப் பணிகள் குறித்து விளம்பரப் பலகை மற்றும் செய்தித்தாள்களில் விளம்பரப்படுத்தப்படும் என்றும் குறிப்பிட்டிருந்தார். தகுதியானவர்கள் டெண்டரில் கலந்து கொள்ளலாம் என்றும், யார் குறைந்த ஒப்பந்தப் புள்ளி கோருகிறார்களோ அவர்களுக்கு மன்ற ஒப்புதல் பெற்று பணி ஆணை வழங்கப்படும் என்றும் தெரிவித்திருந்தார். முறையீட்டு மனுதாரர் டெண்டரில் கலந்து கொண்டிருக்கலாம் என்றும், பணிகள் செய்யும் காலத்தில் எந்தவொரு புகாரும் மனுதாரர் தெரிவிக்கவில்லை என்றும் அவ்வாறு தெரிவித்திருந்தால், மேற்கொள்ளப்பட்ட பணிகளை தலைவர், துணைத் தலைவர் மற்றும் நகராட்சி அலுவலர்களால் பார்வையிடப்பட்டு சரி செய்யப்பட்டிருக்கும் என்றும் தெரிவித்துள்ளார். முறையீட்டு மனுதாரர் தங்களின் புகழை கெடுக்கவோ அல்லது எதையோ எதிர்பார்த்தோ புகார் அளித்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

4. 05.06.2018 அன்று பேர்ணாம்பட்டு முன்னாள் நகர்மன்றத் தலைவர் மற்றும் துணைத் தலைவரிடமும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. மனுதாரரின் குற்றச்சாட்டுகள் முழுவதும் உண்மைக்கு மாறானதாகும் என்றும், அதில் குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு தாங்கள் மறுப்பு தெரிவிப்பதாகவும், பூங்கா இல்லை என்பது உண்மைதான் என்றும் தற்பொழுது மகளிர் விடுதியாக செயல்பட்டு வருகிறது என்றும் அதற்காக எந்தசெலவும் செய்யவில்லை என்றும் அந்த இடம் 18 ஆண்டுகளாக ஆதிதிராவிடர் பெண்கள் விடுதியாக செயல்பட்டுவருவதாகவும் மனுதாரருடைய குற்றச்சாட்டுக்கு எந்தவித ஆதாரமும் இல்லை எனவும், புகார் மனு எழுதி சம்பந்தப்பட்டவர்களிடம் பேரம் பேசுவதுதான் மனுதாரரின் வழக்கம் எனவும் மாவட்ட ஆட்சித் தலைவரால் ஆண்டுதோறும் ஒவ்வொரு பொருளுக்கும் மற்றும் யூனிட்டுக்கும் உயர்மட்டக் குழுவால் விலை நிர்ணயிக்கப்படுவதாகவும் அதன் அடிப்படையிலேயே உள்ளாட்சி அமைப்புகள் செயல்படுவதாகவும் தாங்களாக எந்த விலையும் நிர்ணயம் செய்வது கிடையாது. ஆதாரமின்றி போலியான நபர் மூலம் எழுதப்பட்டுள்ளதெனவும், ஒப்பந்தப்புள்ளிகள் கோரும் போதோ அல்லது இறுதிசெய்யப்படும் போதோ, இறுதிசெய்தபின் பணிகள் நடக்கும் போதோ அவர் புகார் தெரிவித்ததில்லை. எனவே, இப்புகார் மனுவினை தள்ளுபடி செய்யவேண்டுமெனவும் விசாரணையின் போது கேட்டுக்கொண்டனர்.

5. பேர்ணாம்பட்டு நகராட்சி ஆணையாளரிடமும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. தான் கடந்த 8 மாதங்களாக பேர்ணாம்பட்டு நகராட்சியில் ஆணையராக பணிபுரிவதாகவும் அந்நகராட்சியில் அரசியல் கட்சியினரும், சில சமுதாயத்தினரும், தங்களுக்குள் இருக்கும் போட்டி பொறாமைகள் காரணமாக நகராட்சி அலுவலகத்திற்கு தொடர்ந்து புகார் மனுக்கள் அனுப்பி வருகின்றனர் என்றும், இது ஒரு அவல நிலையாக உள்ளதாகவும், நீண்ட நாட்கள் தொடர்ந்து பணிசெய்யவிடாமல் நகராட்சி பணியாளர்களுக்கு ஏதாவது ஒருவகையில்

தொல்லை கொடுப்பார்கள் என்றும் தெரிவித்தார். மேலும், முறைகேடுகள் நடந்துள்ளதாக மனுதாரர் தெரிவிக்கும் புகார்களுக்கு எந்தவித ஆதாரமும் சமர்ப்பிக்கவில்லை என்று 03.04.2018 அன்று நடைபெற்ற விசாரணையின்போது நகராட்சி ஆணையர் தெரிவித்தார்.

6. முறையீட்டு மனுதாரரின் குற்றச்சாட்டுகள் குறித்து பேர்ணாம்பட்டு நகராட்சி ஆணையர் தனது 14.02.2018 மற்றும் 09.04.2018 நாளிட்ட கடிதங்களில் விரிவான அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். மேலும், வேலூர், நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களும் தனது 04.10.2018 நாளிட்ட கடிதத்தில் தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். அந்நகராட்சியின் முன்னாள் நகர்மன்றத் தலைவர், துணைத் தலைவர் மற்றும் தற்போதைய நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் ஆகியோரிடம் மேற்கொண்ட விசாரணை மற்றும் ஆவணங்களின் நகல்களையும் சமர்ப்பித்துள்ளார்.

7. வேலூர் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2012–2013–ஆம் ஆண்டில் சில பணிகளை மேற்கொள்வதற்கு வேலூர் மாவட்ட ஆட்சியர் தனது 03.09.2012 மற்றும் 03.10.2012 நாளிட்ட செயல்முறை ஆணை எண்கள் 1563/அ7/2012–இல் நிர்வாக அனுமதி வழங்கியுள்ளார் என்றும் அப்பணிகளில் ரூபாய் 2.75 லட்சம் மதிப்பீட்டில் மதரஸா இஸ்லாமியா மற்றும் இரஷிதாபாத் தெருக்களில் தலா ஒரு 12 மீட்டர் உயரமுள்ள உயர் மின் கோபுர விளக்கு தனித்தனியே அமைக்க ஒப்பந்த புள்ளி கோரப்பட்டு, 0.66% சதவிகிதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி கோரிய சோபியா ஏஜென்சி என்ற நிறுவனத்தால் பணி மேற்கொள்ள நகர்மன்றத்தில் 06.12.2012 நாளிட்ட தீர்மானம் எண். 303 நிறைவேற்றப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது என நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ளபடி 12 மற்றும் 16 மீட்டர் உயர் மின் கோபுர விளக்குகள் முறையே ரூபாய் 1.07 மற்றும் ரூபாய்1.27 லட்சம் செலவில் அமைப்பது நடைமுறைக்கு சாத்தியமல்ல என்று நகராட்சிகளின் மண்டல இயக்குநர் தெரிவித்துள்ளார்.

8. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தெரிவிக்கப்பட்ட பணிகள் எதுவும் 5–வது வார்டில் மேற்கொள்ளப் படவில்லையென்றும் அதனால் நகராட்சிக்கு ரூபாய் 12 லட்சம் நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது என முறையீட்டு மனுதாரர் தெரிவித்திருப்பதை நகராட்சி ஆணையரும், மண்டல நிர்வாக இயக்குநரும் மறுத்துள்ளனர். மதிப்பிற்குட்பட்டே செலவுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதென்றும், மனுதாரரின் புகார் அடிப்படை ஆதாரமற்றது என்று நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர் உறுதி செய்துள்ளார். இழப்பு ஏற்பட்டுள்ளது குறித்து தணிக்கை அறிக்கையிலும் எதுவும் குறிப்பிடப்படவில்லை என நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

9. 2013–2014–ஆம் ஆண்டில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நகராட்சியின் 21–வார்டுகளில் 84 எண்ணிக்கையிலான சோடியம் விளக்குகள் அமைக்க பரிந்துரைத்ததின் அடிப்படையில் 14.09.2013 நாளிட்ட செயல்முறை ஆணை எண்.925/2013–இல் ரூபாய் 7.14 லட்சம் திட்ட மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 84 சோடியம் விளக்குகள் முழுவதும் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளதென நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். அதனை மண்டல நிர்வாக இயக்குநரும் உறுதி செய்துள்ளார். மனுதாரர் குறிப்பிட்டதுபோல் இப்பணி 2011–2012–ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவில்லை. மேலும், மனுதாரர் குறிப்பிட்டுள்ளது போல் 2013–2014–ஆம் ஆண்டில் ரூபாய் 5.88 லட்சம் மதிப்பீட்டில் பல்ப் பிட்டிங்ஸ் வாங்கியதற்கு வேலூர் மாவட்ட ஆட்சியர் நிர்வாக அனுமதி வழங்கவில்லை என்று மண்டல நிர்வாக இயக்குநர் உறுதி செய்துள்ளார்.

10. 2012–2013–ஆம் ஆண்டில் சாலைப்பணிகள் செய்யாமல் செய்ததாகக் கணக்குக் காட்டி ரூ.70 லட்சத்திற்கு முறைகேடு நடந்துள்ளது என்ற மனுதாரரின் குற்றச்சாட்டிற்கு நகராட்சி ஆணையர் கருத்து தெரிவிக்கையில் ரூபாய் 50 லட்சம் மதிப்பீட்டில் மட்டும் சாலைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டதென்றும் 27.09.2012 நாளிட்ட மன்றத் தீர்மானம் எண்.284–இன் படி 7 வீதிகளில் சாலை அமைக்கப்பட்டுள்ளதென்று தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநரும் இதனை உறுதி செய்துள்ளார். மனுதாரர் தெரிவித்திருப்பது தவறானதும் அடிப்படை ஆதாரமற்றது என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

11. 2013–2014–ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளச்சித் திட்டத்தின் கீழ் ரூபாய் 161 லட்சத்தில் மதினாப்பல்லி, வி.கோட்ட ரோடு மற்றும் ம. இ. வீதியில் 5–வகையான பணிகள் மேற்கொள்ளப்பட்ட விவரத்தினை நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். குடிநீர் பணிகள் செய்யாமலேயே ரூபாய் 176 லட்சம் செலவிடப்பட்டுள்ளது என மனுதாரர் குறிப்பிட்டுள்ளது அடிப்படை ஆதாரமற்றது என நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் தெரிவித்துள்ளார். மேலும் ரூபாய் 161 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதையும் உறுதி செய்தார்.

12. 2012–2013–ஆம் ஆண்டில் பூங்காவிற்கென ரூபாய் 30 லட்சம் செலவிடப்பட்டுள்ளது என மனுதாரர் குறிப்பிட்டுள்ளது உண்மைக்கு புறம்பானது என்று நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். ஆனால் விசாரணையின்போது 2012–2014–ஆம் ஆண்டுகளில் ரூபாய் 90 லட்சம் செலவிடப்பட்டுள்ளது என்று மனுதாரர் தெரிவித்தார். நகராட்சியின் வளர்ச்சிக்காக செய்யப்பட்ட பணிகள் என்ற விளம்பரத்தில் மற்றவை என்று குறிப்பிட்ட இனத்தில் உள்ளவற்றை பூங்கா எனக் குறிப்பிட்டு வேண்டுமென்றே மனுதாரர் பூங்காவிற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டதாக தவறான புகார் தெரிவித்துள்ளார் என்று நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநரும் குறிப்பிட்டுள்ளார்.

13. பேர்ணாம்பட்டு நகராட்சிக்கு ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 2012–2013–ஆம் ஆண்டிற்கு ரூபாய் 40 லட்சம் திடக்கழிவு மேலாண்மை வகைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைக்கு பணிகள் மேற்கொள்ள நகர்மன்ற அனுமதி வழங்கியுள்ளது என்றும், அத்திட்ட மதிப்பீட்டில் வாங்கப்பட்ட தள்ளுவண்டிகள், குப்பைத் தொட்டிகள் பயன்பாட்டில் உள்ளன என்று நகராட்சி ஆணையரும், நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநரும் தங்களது அறிக்கையில் தெரிவித்துள்ளனர். மனுதாரர் குறிப்பிட்ட 9 லட்சம் திட்ட மதிப்பீடு தவறு என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

14. 2012–2013–ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபாய் 50 லட்சம் மதிப்பீட்டில் 7 தெருக்களில் சிமெண்ட் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், 2013–2014–ஆம் ஆண்டில். ரூபாய் 21 லட்சம் மதிப்பீட்டில் 11 வீதிகளில் சிமெண்ட் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இத்தொகை குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் நிதித் தொகுப்பிலிருந்து வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் எந்தவிதமான முறைகேடுகளும் நடைபெறவில்லை என்று நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார். 2013–2014–ஆம் ஆண்டிற்கு சாலைப் பணிகளுக்கென மனுதாரர் குறிப்பிட்டுள்ள தொகை ரூபாய் 23.70 லட்சம் அடிப்படை ஆதாரமற்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

15. 2013–2014–ஆம் நிதி ஆண்டிற்கு குடிநீர் அபிவிருத்தி பணிகளுக்கென 19.09.2013 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு ஆணை எண்.492–இல் ரூபாய் 62 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றும் அத்தொகையில் இரண்டு வகையானப் பணிகள்

ரூபாய் 34.73/– மற்றும் ரூபாய் 25.56/– லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்றம் தீர்மானம் நிறைவேற்றி உள்ளது எனக் குறிப்பிட்டு சம்பந்தப்பட்ட ஆவணங்களை நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர் சமர்ப்பித்துள்ளார். தேன்மலை குடிநீர் திட்டத்திற்கு சட்டமன்ற உறுப்பினர் நிதி ரூபாய் 42 லட்சம் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டது என்ற மனுதாரரின் குற்றச்சாட்டு அடிப்படை ஆதாரமற்றது என்றும் தெரிவித்தார்.

16. 2013–2014–ஆம் ஆண்டில் வறட்சியின் காரணமாக பொதுமக்களுக்கு ரூ. 3 லட்சம் செலவில் டிராக்டர் மூலம் குடிநீர் வழங்கப்பட்டதென்றும், இப்பணி மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிவுரையின்படியே வழங்கப்பட்டுள்ளதென்று நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர் உறுதி செய்துள்ளார். மனுதாரர் குறிப்பிட்டுள்ள ரூ. 8.50 லட்சம் என்பதற்கு எந்தவித ஆதார ஆவணங்களும் சமர்ப்பிக்கவில்லை.

17. பேர்ணாம்பட்டு நகராட்சியின் வார்டு எண். 5–இல் 2012–2013 மற்றும் 2014–2015–ஆம் ஆண்டுகளில் 5 வகையான பணிகள் ரூபாய் 12 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பணிகள் மேற்கொள்வதற்கு முறையாக மன்றத் தீர்மானங்கள் பெறப்பட்டுள்ளன எனத் தெரிவித்து தீர்மான நகல்களை நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர் சமர்ப்பித்துள்ளார். மதிப்பீட்டைவிட அதிகமான செலவுகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் மனுதாரரின் புகாருக்கு ஆதாரம் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

18. வேலூர், நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர் தனது அறிக்கையுடன் முன்னாள் நகர்மன்றத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர் ஆகியோர் விசாரணையின் போது அளித்துள்ள வாக்குமூல நகல்களையும் சமர்ப்பித்துள்ளார். முறையீட்டு மனுதாரர் அடிப்படை ஆதாரமற்ற புகார்களை அனுப்புவதும் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் தகவல்களைக் கோரி அலுவலக பணியாளர்களை மிரட்டுவதும் வாடிக்கையாகக் கொண்டுள்ளார் எனத் தெளிவாகப் புலனாகிறது என்றும், அவ்வாறு தொடர்ந்து மிரட்டி அதன் மூலம் பணம் பறிக்கலாம் என்ற உள்நோக்கம் இருந்துள்ளது என்பதையும் குறிப்பிட்டுள்ளார்.

19. இந்நேர்வின் முறையீட்டு மனுதாரர், பேர்ணாம்பட்டு நகராட்சில் 2011–ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்ட பல்வேறு திட்டப்பணிகளில் நடைபெற்றுள்ள முறைகேடுகள் குறித்து இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். மனுதாரர் தெரிவித்த குற்றச்சாட்டுகள் அனைத்தும் நகராட்சி ஆணையாளர்கள் மற்றும் நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் ஆகியோரால் உரிய ஆதாரங்களுடன் மறுக்கப்பட்டுள்ளன. மேலும், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையினரும் நிதி இழப்பீடு மற்றும் முறைகேடுகள் குறித்து எந்தவித தணிக்கைத் தடையும் ஏற்படுத்த வில்லை. பணிகள் மேற்கொள்ளப்பட்ட பொழுது எந்தவொரு புகாரும் தெரிவிக்காமல், களங்கம் ஏற்படுத்தும் வகையில் எதையோ எதிர்பார்த்தோ அல்லது பணம் பறிக்கும் நோக்கிலேயே முறையீட்டு மனுதாரர் புகார் மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்று முன்னாள் நகர்மன்றத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் விசாரணையின் போது தெரிவித்துள்ளார். பேர்ணாம்பட்டு நகராட்சியில் அரசியல் கட்சியினரும் சில சமூகத்தினரும் தங்களுக்குள் இருக்கும் போட்டி, பொறாமை காரணமாக அலுவலர்கள் குறித்து மனுச் செய்து தொடர்ந்து பணியாற்றவிடாமல் அலுவலர்களுக்கு தொல்லை கொடுக்கும் அவலநிலை தொடர்வதாகவு நகராட்சி ஆணையர் விசாரணையில் தெரிவித்துள்ளார். எனவே, முறையீட்டு மனுதாரரின் குற்றச்சாட்டுகளை நகராட்சி ஆணையரும் நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநரும் ஆதார ஆவணங்களுடன் மறுத்துள்ள நிலையில் முறையீட்டு மனுதாரரின்

குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில் ஆதார ஆவணங்கள் முறையீட்டு மனுதாரர் சமர்ப்பிக்காத வகையிலும் இம்முறையீட்டு மனு ஆதாரமற்றதாக கருதி தள்ளுபடி செய்ய முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018– ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள், 20–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக.

பெறுநர்

1. திரு எஸ்.எம். யூனூஸ்,
53/24, மதரஸா ஏ இசுலாமியா வீதி,
பேர்ணாம்பட்டு – 635 810.

2. நகராட்சி ஆணையர்,
பேர்ணாம்பட்டு நகராட்சி,
பேர்ணாம்பட்டு.

3. நகராட்சிப் பொறியாளர்,
பேர்ணாம்பட்டு நகராட்சி,
பேர்ணாம்பட்டு.

4. திரு எஸ். காத்தவராயன்,
முன்னாள் நகர்மன்றத் தலைவர்,
பேர்ணாம்பட்டு நகராட்சி
பேர்ணாம்பட்டு – 635 810.

5. திரு ஆலியார் ஜுபேர் அகமது,
முன்னாள் துணைத் தலைவர்,
பேர்ணாம்பட்டு நகராட்சி,
பேர்ணாம்பட்டு – 635 810.

6. நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர்,
நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர் அலுவலகம்,
வேலூர்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி